**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 18.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 8015/E/2018**

திரு D.செல்வேந்திரன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செய்யூர்,
காஞ்சிபுரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 26.07.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 31.08.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 25.10.2018 |

******

**ஆணை**

இன்று (18.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு D.செல்வேந்திரன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு D.ராஜா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், செய்யூர், காஞ்சிபுரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 26.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 01.01.1970 ல் இருந்து 06.12.1986 வரையிலான தாதங்குப்பம் கிராமத்தில் நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இலவச நிலம் (Assignment) சம்மந்தமாக நிலம் ஒப்படைப்பு ஆணை நகல், 01.01.1970 ல் இருந்து 06.12.1986 வரையிலான தாதங்குப்பம் கிராமத்தில் இலவச நிலம் வழங்கப்பட்ட பயனாளிகளின் பெயர் பட்டியல், 01.01.1970 ல் இருந்து 06.12.1986 வரையிலான அணைக்கட்டு ஊராட்சி பரமேஸ்வரி மங்கலம் ஊராட்சி அடையாளச்சேரி ஊராட்சி செம்பூர் ஊராட்சிக்கு உட்பட்ட பரசநல்லூர் கிராமங்களின் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இலவச நிலம் மற்றும் (Assignment) சம்மந்தமாக நிலம் ஒப்படைப்பு ஆணை நகல்கள், 01.01.1970 ல் இருந்து 06.12.1986 வரையிலான அணைக்கட்டு பரமேஸ்வரி மங்கலம் அடையாளச்சேரி பரசநல்லூர் கிராமங்களின் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இலவச நிலம் மற்றும் (Assignment) சம்மந்தமாக நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் பட்டியல் நகல் என 4 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகம், மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 31.08.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவானது 06.09.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், செய்யூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க ஆணையிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 25.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய ஆவண கோப்புகள் தங்களது அலுவலக பதிவறையில் தேடிப்பார்த்ததில் கிடைக்கப்பெறவில்லையென்றும், மேற்படி தகவல் மேல்முறையீட்டாளருக்கு 17.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்த ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்

வழங்கப்படவில்லையென்றும், மேல்முறையீட்டாளர் கோரியுள்ள 4 தகவல்களும் வழங்கப்படவேண்டிய தகவலென்றே ஆணையம் தீர்மானிக்கிறது. இதுகுறித்து இன்றைய விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத்தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக எழுத்துமூலமாக ஆணையத்திற்குத் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 26.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**வழக்கு எண்.SA 8015/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செய்யூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**மனுதாரர்**

திரு D.செல்வேந்திரன்,
நெ.4/61, செங்கேளி அம்மன் கோயில் தெரு,
சிட்டிலம்பாக்கம் (கிராமம்)
விட்டிலாபுரம் அஞ்சல்,
திருக்கழுக்குன்றம் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 603 102.

Copy to: Judgement File.
*"VP / PA -25.09.19"*